செ.வெ.எண்:41/2021 நாள்: 23.07.2021

# செய்தி வெளியீடு

திருப்பூர் மாவட்டத்தில் பொதுமக்களின் குறைகளை களைய பிரதி வாரம் திங்களன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வந்தது. கொரானா வைரஸ் (Covid-19) தொற்று காரணமாகவும், சட்டமன்ற தேர்தல் காரணமாகவும் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. கொரானா வைரஸ் தொற்றின் காரணமாக ஊரடங்கு உத்திரவு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக வருவதை தவிர்க்கும் பொருட்டு பொது மக்கள் தங்களது குறைகளை வருகிற 26.07.2021 முதல் பிரதி வாரம் திங்கள் கிழமை அன்று தொலைபேசி மூலம் தெரிவிக்க சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்களது புகார்களை இதற்கென தொடங்கப்பட்டுள்ள (0421-2969999) என்ற தொலைபேசி எண்ணிற்கு காலை 10.30 முதல் பிற்பகல் 1.00 மணி வரை தெரிவிக்கலாம். பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் குறைகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் நிவர்த்தி செய்திடும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி பிரதி வாரம் திங்கட்கிழமையன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும் தொலைபேசி வாயிலாக தங்களது குறைகளை தெரிவித்து உரிய தீர்வினை பெறலாம் என திருப்பூர் **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சு.வினீத்,இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**